முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1014

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

09.07.2022, சனிக்கிழமை

1. பரபிரம்மமே அரங்கா வாழ்க
   பரமானந்த சிவமே தேசிகா வாழ்க
   வரம்பெற்று என் சக்தியாகவே
   வையகத்தில் வாழுகின்ற ஞானியே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
   வழங்குவேன் அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசி
   தாழ்விலா சுபகிருது மிதுன திங்கள்
   (சுபகிருது வருடம் ஆனி மாதம் 25 நாள், 09.07.2022 சனிக்கிழமை)
   தவசி உமக்கு ஆற்றல் பெருக உரைப்பேன்
3. உரைக்கவே நித்தம்நித்தம் ஓங்கார சூட்சும பலத்தை
   நிலமதனில் ஆறுமுகன் உந்தனுக்கு தந்தருளிவர
   சத்தியவான் உன் ஞான சபை கொண்டுதான்
   சாற்றிடுவேன் இந்த கலியுகத்தை மாற்றி அமைப்பேன்
4. அமைக்கவே அரங்கன் உமக்கு ஆற்றல் கூட்டி
   ஆறுமுகன் அமைத்திட்ட பிரணவக்குடில் தன்னில்
   இமைக்காது சேவை ஆற்றுகின்ற எல்லா தொண்டர்கட்கும்
   இனிதே அரங்கன் உன் வழியாக என் காட்சி உறுதியாகும்
5. ஆகவே உன் கொள்கை கொண்டே உலகில்
   அற்புதத்தை ஆறுமுகன் யான் நடத்துவேன்
   ஊக்கமுடன் உன் தர்மத்துக்கு உறுதுணை புரிந்து
   உயர்வாக உன் சேவைவழி இணைந்துள்ள அனைவருக்கும்
6. அனைவருக்கும் ஆறுமுகன் யான் இலகுவாக ஞானம்
   எளிதில் சித்திக்க அருள் புரிந்து
   உலகமெங்கும் அரங்கன் உன் சன்மார்க்கத்தை
   உயர்பேதமாக மக்களிடை கொண்டுசென்று
7. சென்றுமே உலகமக்களெல்லாம் ஜீவதயவின்
   சிறப்பான தர்மவழியில் கலந்து இணைந்து
   மறுக்காது உன் தலைமை ஏற்று
   மண்ணுலகை ஞான ஆட்சிக்காலத்துக்கு உருவாக்குவேன்
8. ஆக்கம் தரும் உன் கொள்கையே
   அகிலத்தை மாற்றுவது உறுதி
   தேக்கமின்றி அந்த சன்மார்க்கத்திற்கும்
   தேசிகன் நீ செய்து வருகின்ற தர்மத்துக்கும்

9. அனைத்திற்கும் ஆறுமுகன் பின்பலமாக
ஆற்றல்பட முன்னின்று யான் வழிநடத்தி
மாற்றம் தனை எங்கும் ஞான வழியாக
மாதவசி நீ கேட்க ஞானமாக உலகோர்க்கு அருளி காப்பேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–